வெளியீடு நிர். 7.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஏது சமயம்?





முதலாவது ஆண்டுவிழா வெளியீடு

சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகம்,

திருநெல்வேலி டவுன்.

12, 13, 14-9-1958

# ஒரு வேண்டுகோள்

உலகு, உயிர், கடவுள் என்னும் இம் முப்பொருள்களின் உண்மை இயல்புகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அழகுற எடுத்து விளக்கும் ஞானநூல்கள் "சித்தாந்த சைவ சாத்திரங்கள் பதினான்கு" அவற்றுள்

பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தமாக உண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ

என்று தாயுமானார் முதலிய ஆன்றோரால் நன்கெடுத்துப் போற்றும் மேம்பாடுற்றுத் துலங்குவது

"சிவஞான சித்தியார்"

என்னும் நூல்.

அது சென்ற ஆவணி விநாயக சதுர்த்தி முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மாலை மணி 7 முதல் 9 வரை ஸ்ரீ சுவாமி நெல்லையப்பர் கோவில் ஆறுமுகநயினார் சந்நிதியில்,

திருநெல்வேலி-பேட்டை "சித்தாந்த பண்டித பூஷணம்"

உயர்திரு ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்களால்

பாடமாக நடத்தப்பட்டு வருகிறது. அன்பர்கள் அனைவரும் வந்துகேட்டு உய்யவேண்டுகிறோம்.

நெல்லை
12—9—58.

சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகம்,
நிர். 73, கீழப்புதுத்தெரு.

வெளியீடு நிர். 7.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# எது சமயம்?

நன்கொடையாளர்

**ஸர்வஸ்ரீ பாணி கம்பேனியார்**

திருநெல்வேலி ஜங்ஷன்.

முதலாவது ஆண்டு விழா வெளியீடு

சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகம்,

திருநெல்வேலி டவுண்.

12, 13, 14-9-1958.

உ

குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே

அவற்றுள்

இலைகொண் டுவந்தனர் பலரே யிலை யொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய ருயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனுல்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே.

(குமர குருபர சுவாமிகள்)

79-3

# பொருளடக்கம்

# அணிந்துரை.

சைவ சமயத்திலே பிறந்துள்ளவர்கள் அநேகர் சைவ சமயத்திலே பிறந்தும் அதன் அருமையை அறியாமல், அழிந்து போகின்ற இந்த உடலைச் சதமென்று நம்பி வயிறு வளர்த்தலே காரணமாக, சைவ சமயத்தைக் கைவிட்டு அந்நிய சமயங்கொண்டு ஆன்ம லாபத்தை இழந்து போகின்றனர். அநேகர் சமயம் இவ்வளவு பயனுடையதென்று அறியாமல், சைவசமயத்திலே இருந்தும் சமயாநுட்டானங்களைக் கைக்கொண்டு ஒழுகி அதன் பயனைப் பெற நினையாமல் உலக வாழ்வே பெரிதென்று எண்ணி யிருந்து மோசம் போகின்றனர்.

ஆகவே சைவப் பெருமக்கள் சமய அறிவுபெற்றுச் சைவ சமய உண்மைகளை அறிந்து சித்தாந்த சைவசமய வரம்பில் நின்று ஒழுகவேண்டும் என்ற ஆவலுடனும் நோக்கத்துடனும் நெல்லைச் சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகத்தாரால் சித்தாந்த சைவச் செந்நெறியின் செம்பொருள் அடங்கியஆறு கட்டுரைகள் கொண்ட இப்புத்தகம் வெளியிடப்படுகின்றது. அக்கழகத்தார்க்குச் சைவ சமயிகள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

இவ்வரிய நூலை வெளியிட உதவி செய்த திருநெல்வேலி ஜங்ஷன் **ஸர்வ ஸ்ரீ பாணிக் கம்பெனி முதலாளிகள்** எல்லோருக்கும் என் சார்பாகவும், செந்நெறிக் கழகத்தாரின் சார்பாகவும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குப் பதினாறு பேறுகளும் அருள எல்லாம் வல்ல சிவ பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

திருநெல்வேலி டவுண்
12—9—1958

**K. பாலன்,**
தபால் தந்தி இலாகா அலுவலர்.

உ

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயிகளிடம் இருத்தற்குரிய இலக்கணங்கள்.

அல்லது

## பதினாறு பேறுகள்

திருக்கயிலாய மலையில் செம்பொற் திருக்கோயிலில் பிரணவ சிம்மாசனத்தில் சர்வலோக நாயகராகிய ஸ்ரீ சிவபிரானர் உமா சமேதராய் என்றும திருவீற்றிருந் தருளுகின்றார். ஒரு சமயம் திருநந்திதேவர் சர்வான்மாக்களின் நலனையும் தம் திருவுள்ளத் தடைத்து அப்பிரானரிடம் பதினாறு வரங்களை வேண்டிப் பெற்றார். அவை பதினாறு பேறுகள் எனவும்படும். 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாயாக' என வழங்கிவரும் ஆசி மொழியிலுள்ள பதினாறு என்பது அப்பதினாறு பேறுகளேயாம். அவை:—

1. மறைகள் நிந்தனை சைவநிந் தனைபொரு மனமும்
2. தறுகண்ணைம் புலன்களுக் கேவல் செய்யுருச் சதுரும்
3. பிறவி தீதெனுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
4. உறுதி நல்லறம் செய்பவர் தங்களோ டுறவும்

மறைகள்—இருக்கு முதலிய 4 வேதங்கள். சைவம்—காமிக முதலிய 28 சிவாகமங்கள். தறுகண்—பொல்லாத. சதுரும்—சாமர்த்தியமும். பிணக்கு—கூடாதிருத்தல்.

5. யாதுநல் லன்பர் கேட்கினும் உதவுறும் இயல்பும்
6. மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
7. ஓது நல்லுப தேசமெய் யுறுதியும் 8. அன்பர்
   தீது செய்யினும் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்

உதவுறும்—கொடுக்கும். ஒறுப்பினும்—கண்டித்தாலும். தெளிவும் — நிச்சயமும்.

---

இந்தக்கட்டுரை "பதினாறு பேறுகள்" என்னும் தலைப்பில் 1927ல் "சமய ஞானம்" பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

9. மனமும் வாக்கும்நின் னன்பர்பால் ஒருப்படு செயலும்
10. கனவி லும்உன தடியருக் கன்பராங் கருத்தும்
11. நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
12. புனித நின்புகழ் நாள்தொறும் உரைத்திடும் பொலிவும்

ஒருப்படு—பொருந்துகின்ற. வழிபடா—வணங்காத. பொலிவும்—பாக்கியமும்.

13. தீமை யாம்புறச் சமயங்கள் ஒழித்திடு திறனும்
14. வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறு வளனும்
15. ஏமு றும்பர தாரம்நச் சிடாதநன் னேன்பும்
16. தூய்மை நெஞ்சில்யான் எனதெனும் செருக்குறுத் துறவும்

புறச் சமயங்கள் — அந்நிய மதங்கள். விழைவுறு — ஆசைப்படாத. ஏமுறும் — காவல் பொருந்திய. நச்சிடாத—விரும்பாத. செருக்கு—கர்வம்.

துறக்கமீ துறைகினும் நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்

துறக்கமீது—சுவர்க்கத்தில். தோய்கினும் — அழுந்தினும். துய்க்கினும்—அநுபவித்தாலும். பிறைக்கொழுந்து—இளம்பிறை.

என்பன. சைவசமயிகள் இப் பிரார்த்தனைப் பாடல்களைத் தினந்தோறும் பாராயணஞ்செய்து அப் பேறுகளைக் கடைப்பிடித்தொழுகிவருவார்களாக. அவர்கள் வாழ்வு சிறக்கும். அது சத்தியம்.

# சமய அறிவு

திரு. T. R. திருவாய்மொழிப்பெருமாள் பிள்ளை, B. A.,
சிரஸ்தார், கலக்டர் ஆபீஸ், திருநெல்வேலி.

**சமயம் ஆவசியகம்.** சமயம் என்றாலும் மார்க்கம், மதம் என்றாலும் பொருள் ஒன்றே. உயிரின் அறிவை மறைத்து நிற்கும் அறியாமை என்னும் நோயை நீக்கி உயிரை மேல் நிலைக்குச் செலுத்துவது சமய ஞானமாகையால், உண்மைச் சமயஞானத்தையும் அச்சமயக் கொள்கைகளையும் ஆராய்ந்து கடைப்பிடித்து ஒழுகவேண்டியது அறிவுடைய மக்கள் கடமையாகும். நம் உடம்பில் ஒரு நோய் காணப்படுமாயின், அநுபவமுதிர்ந்த வைத்தியர் ஒருவரை அழைத்துக் கையைக் காட்டுகிறோம். வைத்தியர் நம்முடைய நோயும் நோய்க்குக் காரணமும் தெரிந்துகொண்டு, அந்நோய்க்குத் தக்க மருந்தை எடுத்து, ஒருநாளைக்கு இத்தனைமுறை இன்ன அளவில் சாப்பிட்டு, இன்ன பத்தியமும் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார். அதுபோல் நம்முடைய உயிரின் அறிவை ஆணவம் (அல்லது அறியாமை) என்ற நோய் பற்றியிருக்கிறது. இந்த நோயைத்தீர்ப்பதற்கு வேதாகமங்களை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்த அநுபவமுடைய தேசிகர் ஒருவரை யடையவேண்டும். அவர் நம்முடைய உலகத் துன்பங்கள் யாவும் ஆணவம் என்னும் நோயால் வந்தன என்று தெரிந்துகொண்டு கணக்கில்லாத சமயங்களாகிய மருந்துகளில் நோயை நீக்குதற்குச் சிறந்த ஔஷதம் எதுவென்று பார்த்து, அந்தச் சமயமாகிய மருந்தை உயிரறிவு ஏற்றுக்கொள்ளும் முறையிலும் அளவிலும் கொடுப்பர். பால்யர்களுக்கும் பலஹீனர்களுக்கும் மருந்து கொடுக்கும் முறை வேறு; உடல் உரம் பெற்றவர்களுக்கும், பெரிய மனிதருக்கும் மருந்து கொடுக்கும் முறைவேறு. குழந்தைகள் எளிதாக உண்ணும் பொருட்டு ருசியான பதார்த்தங்களில் மருந்தைக்கலந்து கொடுப்பதுபோல் மந்த அறிவையுடைய பக்குவமில்லாத உயிர்களுக்கு கதைகளில் சமய உண்மைகளைப் பொதிந்து ஊட்டவேண்டும்.

---

இந்தக் கட்டுரை 'சமய ஞானம்' பத்திரிகையில் 1927 ஜூன், ஜூலை மாத இதழ்களில் வெளியிடப்பட்டது.

உயிரைப் பற்றிய நோய் நீங்க வேண்டுமானால் சமய உண்மைகளாகிய மருந்தை உட்கொண்டு அச்சமயத்துக்குரிய ஒழுக்க ஆசாரங்களாகிய பத்தியங்களைக் காத்தலும் வேண்டும். பத்தியம் இல்லாவிட்டால் மருந்து எதிர்பார்த்த பயனைத் தராததுடன் கெடுதியும் விளைத்துவிடுமல்லவா? ஆகவே அநுபவமுடைய தேசிகரிடத்திலே உண்மைச் சமய ஞானத்தைக் கேட்டுத் தெளிந்து அச்சமயாசாரங்களைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டுவது இன்றியமையாததென்பது பெறப்பட்டது.

**பிராகிருதர்** இத்தகைய சமய அறிவை — உயிரின் நோயை நீக்கும் அறிவைப் —பற்றிப் பேசத் தொடங்குங்கால் சிலருக்கு ஆமணக்கெண்ணெய் குடிப்பது போலிருக்கும். உடனே குமட்டலும் வந்துவிடும். 'சமயஞானத்தைப்பற்றிப் பேச இதுவோ சமயம்? நரை திரை மூப்புவந்து கோலூன்றி நடக்கும் காலத்தில்அல்லவா சாத்திரக்குப்பைகளைப் புரட்டி வேதாந்த சித்தாந்த வியவகாரம்பண்ணி நேரத்தைக் கழிக்கவேண்டும்? இப்பொழுது என்ன அவசரம்? என்று சர்வஜ்ஞர்கள் பலர் பிரசங்கம் செய்வர். இவர்கள் அறுபது வயதுவரை இருப்பதற்குப் பிரமாவிடத்தில் வரம் பெற்று வந்திருக்கிறார்கள் போலும். ஆனால் எல்லாரும் வாங்கி வந்திருக்க மாட்டார்கள். எந்த நிமிஷம் இவ்வுடலைவிட்டு உயிர்பிரியும் என்பது விளங்கவில்லை. இவ்வுடல் அழியுமுன்னர் விரைவில் நமது உயிருக்கு வேண்டிய காரியங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டுமே என்ற கவலை கொஞ்சமும் இவர்களுக்கு இல்லை. அதுமாத்திரமா? 'கடவுளேது, மோக்ஷமேது, கடைந்தெடுத்த புளுகைத் தவிர வேறென்ன. எவனோ எழுதிவைத்தான். அதைக் குருட்டுத்தனமாக நம்பி வருகின்றனர். பழைய கர்நாடக ஆசாமிகள்' என்ற பரிகாசமும் வேறே! இவர்களுக்குச் சொல்லும் நல்லுபதேசம் அத்தனையும் செவிடன் காதில் ஊதுவதையே யொக்கும். சம்சாரசாகரத்திலே அழுந்தி ஆசைப்புயற்காற்றால் கொதித்தெழுகின்ற பயங்கரமான வினை அலைகளால் துன்பப் பாறைகளில் மொத்துண்டவுடனேதான் 'ஆ! தெய்வமே கண்ணில்லையா? எனக்கு இரங்காயா?' எனக் கதறுவர். இந்தக் கூட்டத்தாரை நம் சாத்திர நூல்கள் **பிராகிருதர்** என்று கூறும். அதாவது பிரகிருதி

அல்லது உலக சம்பந்தம் உள்ளவர்கள். உலக இன்பங்களிலே ஈடுபட்டவராய் மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு ஆற்றலும் அறிவும் காதலும் இல்லாதவர்கள் இவர்களை விடுத்து இன்னொரு சாராரைப் பார்ப்போம்.

**வைநயிகர்**

ஒரு சாரார் தெய்வபக்தி, அடியார் பக்தியுடையவராய் இருக்கிறார்கள். இவர்கள் சமயம் விதித்த ஒழுக்க நெறியில் வழுவாது நிற்கிறார்கள். உண்மையறிவையடைய வேண்டும் என்ற ஆசை இவர்களிடம் மிகுதியாக உண்டு. உண்மை நூல்களை நல்லாசிரியரிடத்தில் கற்றுத் தெளிந்து அவ்வழியில் நிற்கிறார்கள். இவர்களே **வைநயிகர்** எனப்படுவர். இவர்களுக்கே ஏனையோரினும் சிறப்பாகச் சமய ஞானம் வேண்டப்படும். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறி' வல்லவா?

**சமய பேதங்களும் தருக்கவறிவும்**

உலகத்தில் பலவேறு வகைப்பட்ட சமயங்கள் உள்ளன. அவற்றின் கொள்கைகளும் வேறு; சமய வொழுக்கங்களும் வேறு. அவை யாவும் நம்முடைய உயிர் இப்பொழுதிருக்கும் நிலையை விட்டு இதைவிட ஓர் உயர்ந்த நிலையையடையும் என்பதை மாத்திரம் ஒப்புக்கொள்ளுகின்றன. ஆனால், அந்த நிலை எப்படிப்பட்டது என்பதிலும், அதை அடையும் உபாயம் யாது என்பதிலும், அந்நிலைமையை உயிர்களுக்குக் கொடுப்பவன் ஒருவன் உண்டா உயிர்கள் தாமே யடையுமா என்பதிலும், கொடுப்பவன் ஒருவன் உண்டானால் அவனுடைய இலக்கணம் இது என்பதிலும் அவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தம் இது என்பதிலுமே சமயங்கள் யாவும் பேதப்படுகின்றன. இவ்வேற்றுமைகளில் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பொருந்தாதவற்றைத் தள்ளி உண்மையை உணர்வதற்குத் தருக்க அறிவு அவசியம் வேண்டப்படும்.

தற்காலத்தில் சிலர் * சமரசக்கொள்கை என்ற

---

* 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' என்று தாயுமானசுவாமிகள் கூறிய சமரசம் வேறு. வேதாந்தம் என்பது உபநிடதம். சித்தாந்தம் என்பது சிவாகமம். இவ்விரண்டன் கருத்தும் ஒன்றே என விளக்கச் சமரசமென்று சொன்னதேயன்றி எல்லாமதக் கொள்கைகளையும் சமரசமாகக் கொள்ளவேண்டுமென்று கூறியதில்லை. ஆகையால் தாயுமானசுவாமிகள் சொன்னதும் இங்கே சொன்னதும் முரணில்லை.

**சமரச ஆராய்ச்சி**

ஒரு குழறுபடைக் கொள்கையைத் தொண்டை வெடிக்கப் பிரசங்கம் செய்கிறார்கள். 'எல்லாச் சமயமும் ஒன்றுதானே. ஒரு சமயத்துக்கும் இன்னொரு சமயத்துக்கும் என்ன வித்தியாசம்' என்று சொல்லுகிறார்கள். சமய சம்பந்தமாக வெறிகொண்டு கலகம் விளைத்தலும் ஒரு சமயத்தாரை இன்னொரு சமயத்தார் இகழ்ந்துரையாடலும் நாகரிகமுடைய மக்கள் செய்கையாகமாட்டா வென்பதில் சந்தேகமில்லை. ஆனால் 'கடவுள் ஒருவர் உண்டு. அவரே உலகங்களையெல்லாம் படைத்துக்காத்து அழிக்கிறார்; அவரின்றி ஓரணுவும் அசையாது' என்று சொல்லுகிற சமயமும், 'கடவுளே இல்லை' யென்று சொல்லும் ஒரு சமயமும் எப்படி ஒன்றாகும். 'உயிர் வேறு, உலகம் வேறு, கடவுள் வேறு, கடவுள் ஆளுபவர், நாம் அடிமைகள்' என்று சொல்லுகிற சமயமும், 'கடவுளே உலகம் உயிர் முதலியனவாக இருக்கிறார். நாமும் கடவுள்தான் உலகமும் கடவுள்தான். எல்லாம் கடவுள்தான்' என்று சொல்லுகிற சமயமும் எப்படி ஒன்றாகும்? ஐந்தும் மூன்றும் எட்டு என்று சொல்லுவதும் ஐந்தும் மூன்றும் பத்து என்று சொல்லுவதும் ஒன்றாகுங் காலத்தில் இம்மதங்கள் யாவும் ஒன்றாகும்.

**ஒரே சமயம் கூடுமா?**

இனிச் சிலர் 'உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான மதம் ஒன்று ஏற்படுத்தி அதைப் பரப்ப வேண்டும்' என்கிறார்கள். இது மலைகல்லி எலி பிடிப்பதைத் தவிர வேறில்லை. உலகத்திலுள்ள மக்கள் கணக்கில்லாதவர். அவர்களின் அறிவும் பல திறப்பட்டனவாதலால் ஒருவர் அறிவதைப்போல் மற்றொருவர் அறிய முடியாது. ஓர் உபாத்தியாயர் ஒரே பாடத்தை 40 மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும்பொழுது ஒவ்வொரு மாணாக்கனும் அவனவன் அறிவின் திட்ப நுட்பங்களுக் கேற்பவே அறிகிறான். சிலர் நன்றாய் அறிகிறார்கள், சிலருக்கு விளங்கியும் விளங்காமலும் இருக்கும்.

சிலருக்கு விளங்குவதே யில்லை. இவ்வாறு ஆன்மாக்களின் அறிவு ஒரே தன்மையாய் இல்லாதிருப்பதை நமது அனுபவத்தில் பலகாலமும் தெரிந்திருந்தும் அவ்வான்மக்கள் அனைத்தும் ஒப்புக்கொள்ளும் சமயம் ஒன்று ஏற்படுத்தக்கூடும் என்று கூறுபவர்களுக்கு நாம் என்ன செய்வது? சிரித்துத் தொலைக்க வேண்டுவதுதான்.

**சமயங்களின் படிமுறை**

உயிர்களின் அறிவு பலதிறப்படவே அவைகள் பின்பற்றி யொழுகும் சமயங்களும் பலவாயின. ஆனால் சமயங்கள் யாவும் உண்மை யாராய்ச்சி செய்பவர்களுக்கு ஒன்றற்கொன்று விரோதமானவைகளாகாமல் * படிகளாகவே இருக்கின்றன.

கடவுள் ஒருவர் இல்லை. உலகம் அழியாமல் நித்தியமாய் உள்ளது. உலக இன்பமே மோக்ஷம் என்று **உலோகாயதர்** சொல்லுவர்.

கடவுள் ஒருவர் இல்லை. ஆனால் உயிர்கள் தம்மிடத்து உள்ள குற்றங்கள் நீங்கப்பெற்றுப் பரிசுத்த நிலையை யடைந்தவுடன் கடவுட்டன்மை வரும் என்று **பௌத்த** சமயத்தாரும் **சமண** சமயத்தாரும் கூறுவர்.

கடவுள் வேண்டியதில்லை. உயிர்களாற் செய்யப்படுகிற யாக முதலிய கர்மங்களே உயிர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும் என்று **மீமாம்சை** நூலார் சொல்லுவர்.

கடவுள் ஒருவர் உண்டு. ஆனால் அவருக்கு இயற்கையாக ஞானம் கிடையாது. உயிர்களைப்போல மனத்தோடு கூடினாற்றான் ஞானமுண்டென்பர் **வைசேடிக நூலார்.**

**சாங்கிய நூலார்** உயிர்களும் கடவுளும் உண்டு. ஆனால் இப்பொழுதிருக்கும் உயிரின் நிலைக்கும் மோக்ஷம் என்பதற்கும் வித்தியாசமில்லை என்றும் சுகமும் துக்கமும் தனக்கு வருவதாக

* தெரிபொருட் பனுவற் படிவழி சென்று சென்றேறி' என்பது **திருவிசைப்பா.**

எண்ணுவதாலேயே உயிரை அஞ்ஞானம் மூடிவிட்டதென்றும் உண்மையை அறிந்துவிட்டால் அதுவே மோக்ஷம் என்றும் கூறுவர்.

**பாதஞ்சல நூலார்** மேற்கூறியபடியே கூறி உண்மையை அறிவதற்கு யோகப்பயிற்சி வேண்டுமென்பர்.

**வேதாந்திகள்** என்ற மற்றொரு சாரார், உயிர் உலகம் என்ற பொருள்கள் கிடையா. எல்லாம் பொய்த்தோற்றம். பிரமம் ஒன்றே உண்டு. அப்பிரமமே உலகங்களாகவும் உயிர்களாகவும் பிரதிபிம்பித்திருக்கிறது. நாமும் பிரமமே, உயிர்களல்ல என்று ஞானத்தால் அறிவதே முத்தி என்பர்.

இனி, உயிர், உலகம், கடவுள் என்ற பொருள்கள் எல்லாம் ஒன்றல்ல, வெவ்வேறுதான். ஆனல் உயிர் முத்திநிலையை யடைந்தவுடன் இறைவனைப் போல படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய தொழில்களைச் செய்யும் எனச் **சிவசமவாதிகள்** கூறுவர்.

மேற்கூறிய சமயக்கொள்கைகள் பலவற்றையும் தருக்க முறைப்படி ஆராய்ச்சி செய்து அவற்றின் பொருந்தாமைகளை விளக்க இடம் போதாது என்றாலும் உலக வின்பமே முத்தி யென்பவனைவிட உயிர்கள் சில சாதனத்தால் இப்பொழுதுள்ள நிலையினும் உயர்ந்தநிலை யடையுமென்பவன் மேலல்லவா? அவனை விட வேதம் விதித்த சற்கருமங்களைச் செய்து கருமத்தை உடம்பட்டவன்மேலில்லையா? இம்மூன்று நாஸ்திகர்களைவிடக் கடவுள் ஒருவர் உண்டு என்று கொண்டவன் மேலில்லையா? இவ்விதம் அபிமானம் முதலிய குற்றங்கள் நம்மிடம் இன்றி நாம் உண்மையை ஆராய்வோமானல் ஒவ்வோர் மதமும் உயிர் வாழ்வு அடைதற்கு ஒவ்வோர் படியென்பதை நன்றாக அறியலாம். நாமே இவ்வித ஆராய்ச்சி செய்வதற்கு நமக்கு அதிகமான வயது போதுமான அறிவு இல்லை. கடவுள் அருள்பெற்ற பெரியோர்கள் அம்மதங்களை யெல்லாம் ஆராய்ச்சிசெய்து சைவ சித்தாந்தம் ஒன்றே மோக்ஷத்திற்கு நேர்வழியென்பது அருளிச் செய்திருக்கிறார்கள்.

அச்சமயத்தின் முக்கிய கோட்பாடுகளாவன:—

**சைவ சித்தாந்தக் கொள்கை**

கடவுள் ஒருவர் உண்டு. உயிர்கள் கணக்கில்லாதன. உயிர்கள் அநாதியே செம்பிற் களிம்பு போல ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றன. ஆணவ மலம் உயிரறிவை மறைத்து இறைவனை யடையவொட்டாமல் தடுத்து நிற்பதால், இறைவன் மாயையினின்றும் உலகங்களைப் படைத்து உயிர்களுக்கு அவ்வவற்றின் கர்மத்துக்குத் தக்க பலனைக்கொடுத்துப் பக்குவமடைந்தபின் அவற்றின் மலத்தைத்தகித்து முத்தியிற் சேர்ப்பர். சிவனடியை அடைந்த உயிர் சிவானந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும். இதுவே சைவ சித்தாந்த முத்தி.

**சித்தாந்த சைவத்தைப் பற்றிப் பெரியார் அருளியன.**

சைவ சித்தாந்தம் இவ்வுயரிய கருத்துக்களைக் கொண்டது என்பதை விளக்கவே நமது குமரகுருபரசுவாமிகளும் 'ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனிபிழிந்த சாரம் கொண்ட சைவசித்தாந்தம்' என்று வாயாரப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். சைவ சித்தாந்தத்திற்கு மாபாடியம்செய்த ஸ்ரீசிவஞானசுவாமிகள் சைவ சித்தாந்த ஞானத்தால் தாம் அடைந்த ஆனந்த நிலையை

'மாறினேன் சமய பேத வழிப்படும் புன்மை யெல்லாம்
தேறினேன் வீடு சேர்க்குஞ் சைவசித் தாந்த மென்றே
யேறினேன் சிவலோ கத்தே யிரண்டறக் கலந்தொன்றாகி
யாறினேன் வருத்த மெல்லாங் கலைசைக்கோ வருளி
னாலே'

என்றருளிச் செய்திருக்கிறார்கள்.

**முடிவுரை.** பல வேறு வகைப்பட்ட சமயக் கொள்கைகளையும் அவை ஒன்றற்கொன்று படிக்கிரமமாவதையும், சைவ சித்தாந்தம் சிரஸ்தானமாக விளங்குவதையும் கண்டோம். இச் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையெல்லாம் ஒருங்கே திரட்டிச் சாரமாக வைத்திருப்பன நம்முடைய சித்தாந்த சாத்திரங்கள். வேதம் ஆகமம் தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளாகிய நதிகளிலுள்ள தெளிந்த நீரை எடுத்து அதில் அந்த ரசத்தை வார்த்துப் பருகும்படி அளிப்பது நமது சிவஞான பாஷ்யம். இத்தகைய சமயநூல்களை நம்மவர் பலரும் கற்று உண்மைச் சமய ஞானத்தை யடையுமாறு எல்லாம் வல்ல சிவபிரான் அருள் புரிவாராக.

# வைதிக சைவம்

பஞ்சாக்ஷரபுரம், வாலையானந்த சுவாமிகள்.

வைதிக சைவம் என்ற பெயரால் பெறப்படும் பொருள் வேத சம்பந்தமான சிவாகமம் என்பதாம். வைதிகம்—வேத சம்பந்தமுள்ளது: * சைவம்—சிவாகமம். எனவே வேத நூலையும் சிவாகம நூலையும் முக்கிய பிரமாணமாகக் கொண்ட ஒரு சிறந்த சமயத்துக்கு வைதிக சைவம் என்ற பெயர் பொருந்துகின்றது.

ஆன்மாக்கள் எண்ணில்லாதனவாய் அநாதியாய்ப் பல திறப்படப் பந்தித்த பாசத்தடையுடையவைகளாய் இருத்தலின் அவைகளுக்கு முதல்வன் அப்பாசத்தடையால் நேர்ந்த அறியாமையைப் போக்கி அறிவை விளக்குகின்றபோது ஆன்மாக்களுக்கெல்லாம் அறிவு ஒரு தன்மையாக விளங்குவதில்லை. சூரியன் நடுநின்று ஒரே தன்மையாகப் † பூதவிருளைப்போக்கிக்கண்ணொளியை விளக்கினாலும் கண்களெல்லாம் ஒரே தன்மையாக விளங்கப் பெறாது தத்தம் தூய்மைக்கு ஏற்றபடி விளங்கப் பெறுவது * கண்கூடு.

இவ்வாறு தம்மைப் பந்தித்த பாச சத்தி பேதத்தால் பல திறப்பட அறிவு விளங்கப் பெற்ற ஆன்மாக்கள் ஓதி உணர்ந்து ஒழுகத்தக்க நூல்களும் பலதிறப்படும் அல்லவா? அவைகளை அருளிச்செய்த முதல்வன் ஆன்மாக்களை இரண்டு பெரும் பகுதிகளாக வகைப்படுத்தி, அவைகளுக்குப் பொதுவாக ஒரு வகை நூல்களையும் சிறப்பாக ஒரு வகை நூல்களையும் அருளிச் செய்தான். † பொது நூல் வேதமெனப் பெயர் பெறும். சிறப்பு நூல் சிவாகமமெனப் பெயர் பெறும். சிவாகமத்துக்குச் சைவம் என்ற பெயரும் உண்டு.

---

'இந்தக் கட்டுரை 1927ல் "சமய ஞானம்" பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

* "வேத நூல் சைவ நூல்" சித்தியார் VIII. 15ல் சிவாகமங்கள் சைவமென்னும் பெயரால் கூறப்பட்டிருத்தல் காண்க.

† பூதவிருள்—வெளியேயுள்ள இருட்டு.

* கண்கூடு—பிரத்தியக்ஷம்.

† 'வேதமொடாகமம் மெய்யாம் இறைவனூல், ஓதும் பொதுவும் சிறப்புமென்றுன்னுக'-என்பது திருமந்திரம். 'ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூலாம்' என்பது சிவஞான சித்தியார்.

அவற்றுள் $ வேதமானது உலகியலைக் கூறுவது, பொது வகையாக மெய்ந்நெறியாகிய சிவ நெறியையும் அது கூறும். சைவமானது சிவநெறியைச் சிறப்பாக விரித்துக் கூறுவது.

** வேத நூல் ஆன்மாக்களுக்கெல்லாம் பொது. சைவ நூல் விளக்கம் மிகுதியுற்ற ஆன்மாக்களுக்கே சிறப்பாக உரியது.

†† இக்காலத்தில் ஒரு சிலர் தமது பேதைமையால் வேதத்தை நிந்தித்துப்புறக்கணித்தும், சைவத்தைப் போற்றுவதுபோற் பாவித்து அதன் மூல தத்துவங்களைக் களைந்தும் வருகின்றார்கள். வேறு சிலர் தாங்கள் ஒரு சமயத்தையும் சாராது, சமயாசாரியர் பாற் சமய வுண்மைகளைக் கேட்டறியாது தான்றோன்றிகளாய்ச் சமய நிச்சயம்செய்ய முற்படுகின்றார்கள்.

கடவுளால் அருளிச்செய்யப்பட்ட வேதத்துக்கு விரோதமாகச் சித்தாந்தசைவம் எவ்விதத்திலும் எப்பொழுதும் இருக்க முடியாது. ஆகையாற்றானே பெரியோர்கள் **வைதிகம்** என்ற அடைகொடுத்துச் **சைவத்தை** வழங்கி வந்திருக்கின்றார்கள்.

" இராஜாங் கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகி தந்தோ "

என்றார் நமது தாயுமானப் பெருந்தகையார். *

ஆதலால் சைவர் ஒவ்வொருவரும் வேதத்தையும் வேதக் கிரியைகளையும் கைக்கொண்டே சைவநெறியில் சரிக்கவேண்டும் என்பதை **வைதிக சைவம்** என்ற பெயர் விளக்குகின்றது.

---

$ உலகியல் வேதநூல் ஒழுக்கமென்பதும், நிலவு மெய்ந்நெறி சிவநெறியதென்பதும்'—என்பது பெரிய புராணம். திருஞான. 820.

** 'நீதியினல் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும் நிகழ்த்தியது'—என்பது சிவஞான சித்தியார்.

†† இப்பகுதி நன்கு கவனிக்கத்தக்கது.

* தாயுமான சுவாமி பாடல். ஆகாரபுவனம் 10.

# சமய வரம்பு

துறைசை, ஆதீன வித்வான் காலஞ்சென்ற
உயர்திரு V. சிதம்பரராமலிங்க பிள்ளை

உலகத்திலே பல சமயங்கள் இருக்கின்றன. இந்தச் சமயங்களெல்லாம், இப்பொழுது நாம் இருக்கிற நிலையைவிட உயர்ந்த ஒருநிலை இருக்கிறதென்றும், அந்த நிலையை அடைதற்குரிய சாதனங்கள் இவையென்றும், அந்தச் சாதனங்களால் நாம் அடையும் பயன்கள் இவையென்றும் கூறுகின்றன.

ஒரு கடையிலே பலவகைப்பட்ட பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பினும் அக்கடைக்குச் செல்பவர்கள் தமக்கு வேண்டிய பொருள்களையே வாங்கிச் செல்லுகின்றார்கள். ஒரு விருந்திலே பலவகைப்பட்ட உணவுப்பொருள்கள் பரிமாறப் பட்டிருப்பினும் அவ்விருந்துக்கு வந்தவர்கள் தமக்கு விருப்பமான உணவுகளையே உண்டு செல்லுகின்றார்கள். அவ்வாறே உலகத்திலே பல சமயங்கள் நிலவினும் நாம் நம்முடைய அறிவின் நிலைமைக் கேற்ப ஒவ்வோர் சமயத்தைச் சிறந்த மெய்ச் சமயமெனக் கொண்டு அச்சமய நூல்களைக் கற்று அவற்றின்வழி நிற்கின்றோம்.

இப்படி நாம் ஒரு சமயத்தை மெய்ச் சமயமெனக் கொண்டு அச் சமய நூல் வழி நிற்குங் காலத்தில் ஒரு சில காரணங்களால் நாம் கொண்டிருக்கும் சமயத்தைவிட மற்றொரு சமயம் சிறந்த தென்று அறிந்தால் அப்புதிய சமயத்திலே நாம் பிரவேசிக் கிறோம் ஒருவர் தமது வாழ்நாளில் இம்முறையாகப் பலசமயங் களைத் தழுவுதல் கூடும். திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சமய வழி நிற்குங்காலத்தில் தந்தையும் தாயும் ஒருசேர இறந்ததும் தமக்கையாராகிய திலகவதியாருக்கு நிச்சயித்திருந்த கணவர் போர்க்களத்து உயிர் நீத்ததுமாகிய சம்பவங்களால் யாக்கை நிலையாமை உலக நிலையாமை முதலியவற்றை யுணர்ந்து, அந்நிலை யாமைகளை விதந்து எடுத்துப்போதிக்கும் சமண சமயம் புகுந் தார்கள். பின்னர் அச்சமய மந்திரங்கள் தமது சூலை நோயைத் தீராமையின் சைவசமயம் புகுந்து அந்நோய் நீங்கப்பெற்றார்கள்.

---

இத்தக்கட்டுரை 1927ல் "சமயஞானம்" பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ சுதரிசனுசாரியார் எனப்படும் அரதத்தாசாரியர் பிறப்பினுல் வைஷ்ணவராயிருந்து பின் சைவ சமயத்தை மெய்ச் சமயமெனக்கொண்டு, சிவானுக்கிரகத்தால் பழுக்கக்காய்ச்சிய இருப்பு முக்காலியில் எழுந்தருளியிருந்து சுலோகபஞ்சகம், சுருதிசூக்தி மாலை முதலியவற்றை அருளிச்செய்து சைவஸ்தாபனம் செய்தருளினூர்கள்.

உலகுடைய நாயனுர் தாம் முதலிலே புறச்சமயத்தவராக இருந்து, பின்பு ஞான ராஜதானியாகிய திருவாவடுறையை அடைந்து அங்கே ஞானுசாரியரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகளிடம் உபதேசம் பெற்று நிஷ்டாபரராய் வீற்றிருந்தார்கள்.

இவை பண்டைக்கால சரித்திரங்கள். இக்காலத்தும் பலர் தாம் முதலிலே கொண்டிருந்த சமயத்தைவிட்டு நீங்கி வேற்றுச் சமயம் புகுவதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறேம். இது நிற்க.

ஒரு சமயத்தைப் பின்பற்றி வருகிறவர்களிலே ஒருவர்க்குச் சில கருத்துக்கள் தாம் பின்பற்றிவரும் சமய நூலுக்கு விரோதமானவை என்று உண்மையாகத் தோன்றினுல், அவர் தாம் முதலிற்கொண்டிருந்த சமய நூற்பொருளையேனும் அந்தச் சமய ஆசாரியரையேனும் சிறிதும் உல்லங்கனம் செய்யாது அந்த மதத்தின் வேறு பிரிவினராகிறுர்கள்.

வைஷ்ணவ சமயத்திலேயுள்ள தென்கலையாரும் வடகலையாரும் சமயக்கோட்பாடுகளின் சில அமிசங்களிலே ஒரு சில வித்தியாசங்கள் உடையவராயினும், சமய நூல்களாகிய வேதாகமங்களிடத்தும் திவ்வியப் பிரபந்தத்திலும் ஸ்திரபுத்தியும் ஸ்ரீ ராமாநுஜாசாரியரிடம் ஸ்திர பக்தியும் அவ்விரு கலையாருக்கும் ஒப்ப உண்டு.

கிறிஸ்து சமயத்திலே அளவிறந்த பிரிவுகள் இருக்கின்றன. என்றுலும் அப்பிரிவினர் அனைவரும் விவிலிய நூலைச் சிறந்த பிரமாண நூலாகக்கொள்ளுவதிலும் கிறிஸ்துநாதரைத் தமது மதா

சாரியாராகக்கொண்டு போற்றுவதிலும் எவ்வித வித்தியாசமும் தம்முள் இல்லாதவர்கள்.

மகம்மதியர்களுக்குள்ளும் பல வகுப்புக்கள் இருக்கின்றன. ஆயினும் கோரான் தங்களுக்குக் கடவுளாலே கொடுத்தருளப் பட்ட பிரமாண நூல்; மகம்மது நபியவர்களே நபிநாயகம் என்ற கருத்துக்களில் அவ்வகுப்பாரில் யாதும் மாறுபாடில்லை.

இனி, மேல் நாடுகளிலே ஆராய்ச்சியாளரென ஒரு சாரார் இருக்கிறார்கள் இவர்களுக்குத் தாங்கள் முதலிலே கொண் டிருந்த கிறிஸ்து சமயக்கொள்கைகளில் சிலபல விஷயங்கள் பொருந்தாதன என்று கண்டு, அச்சமயத்தினின்றும் விலகித் தனியாக இவர்கள் பிரிந்து கொள்ளுகிறார்கள்.

இவ்வாறு முதலில் ஒரு சமயத்தைத் தழுவிப்பின் மற்றொரு சமயம் புகுதலும், ஒரு சமயத்தின் உட்பிரிவாகப் பிரிதலும், எச் சமயத்தையும் பற்றாது தனித்திருத்தலுமாகிய இம்மூன்றும் தம் அளவிலே உண்மைப்பயன் கிடைக்கவேண்டும் என்னும் ஆசை யாலே நிகழ்கின்றன. இவற்றால் எச்சமயத்துக்கும் கேடு இல்லை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, நமது சைவ சமயத்தாரிடம் மட்டும் சமய வரம்புக்கு மாறுபட்டன பல காணப்படுகின்றன நம்மவர்களுள்ளே பலர் தம்மைச் சைவ சமயி என்றே சொல்லிக் கொண்டு தேவார முதலியவற்றை ஓதி வந்தும், சமயக்கோட்பாடு பற்றி கைவல்லியம் ஞானவாசிட்டம் முதலிய ஏகான்ம வாத நூல்களைப் படித்து அந்நூற் பொருள்களே சைவசமய உண்மை கள் எனக் கொள்ளுகிறார்கள். ஐயோ! பாவம்!!

வேறு சிலர் சைவ சமய நூல்களிலே சிறந்த நூல் **சித்தர் நூல்கள்** எனக் கொள்ளுகிறார்கள். இந்தச் சித்தர் நூல்களிலே சொல்லப்படும் விஷயங்கள் இவையென்பதே புலப்படவில்லை: புலப்படாதனவெல்லாம் சித்தர் பரிபாஷை யென்கிறார்கள். இச் சித்தர் நூல்களை இதுவரையிற் சைவபரம்பரையிலே யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தாவார மில்லை தமக்கோரா தாரமில்லை
தேவார மேதுக்கடி — குதம்பாய்
தேவார மேதுக்கடி

என்ற இதுவும் அச்சித்தர் நாற்செய்யுளுள் ஒன்று. சைவர்களாலே சிறந்த அநுபவ சித்தமான பிரமாண நூலாகத்தேவாரம் ஆன்மார்த்த பரார்த்த பூசைகளிலே நியமமாக ஓதப்பட்டுவரவும் இச்செய்யுள் இவ்வாறு கூறுகின்றது. இச் சித்தர் நூலுக்கும் தேவாரத்திற்கும் எவ்வளவு சம்பந்தம் என்பதை அறிஞர்களே நிச்சயிக்கவேண்டும். அன்றியும் சைவப் பெரியார்களாலே பிரமாணமாகக் கொள்ளப்பட்ட **சித்தாந்தப் பிரகாசிகை** என்னும் நூல், சித்தர் நூலிலே பெண்புணர்ச்சி, கொலைமுதலியவை, இருத்தலால் அந்நூல்வழி நடந்தவர்கள் பிசாசபதத்தை அடைவார்கள் என்று கூறுகின்றது. இதனை நம்மவர்கள் அறிய வேண்டாமா?

மற்றும் ஒரு சிலர் எல்லா விஷயங்களையும் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துத் தம் அறிவு சென்ற அளவிலே ஒருவித முடிவுக்கு வருகிறார்கள். நமது அறிவு நல்ல முறையிலே அமைந்தால் முடிவும் நல்ல முடிவாக அமையும்; செங்கல் அறுக்கும் மரக்கருவி சாய்ந்திருந்தால் செங்கலும் கோணித்தான் இருக்கும்.

'கட்டளை கோடித் திரியில் கருதிய
இட்டிகையுங் கோடும்.'

நிஷ்பக்ஷபாதமான நிலையிலே நின்று, நமக்குக் கிடைக்கின்ற நூற் பிரமாணங்களையும் ஆன்றோர் ஆசாரத்தையும் அடிப்படையாக வைத்து ஆராய்ச்சிசெய்வது எல்லாராலும் விரும்பத்தக்கதே. அவ்வாறில்லாமல் பலவகைப்பட்ட திரிந்த கருத்துக்களை மனத்தில் வைத்துக்கொண்டு, **மிஸ்காதரைன் மேயோ** என்னும் அமெரிக்க கன்னிகை நம்மவரது சமூக சமய வழக்கங்களைக் குறித்து உண்மைக்கு விரோதமாக 'இந்தியத்தாய்' என்ற நூலில் எழுதியதுபோலச் சமய ஆசாரியர்களாகிய ஞானசம்பந்தர் முதலியவர்களிடமும் சந்தானசாரியர்களாகிய மெய்கண்டதேவர் முதலியவர்களிடமும் குற்றம் கற்பிக்க இந்த ஆராய்ச்சியாளர்கள் துணிகிறார்கள். இவர்களை நாம் சைவ சமயிகளென்று கொள்வது எப்படி?

ஒரு ஆராய்ச்சியாளர் உமாபதி சிவாசாரியராகிய சந்தாந சாரியரது தந்தையார் ஆரியப்பிராமணரென்றும் தாயார் மட்டும் தில்லைவாழந்தண வகுப்பினரென்றும் தமது திரிகால ஞானத்தாற் கண்டறிந்து, இவ்விதம் இருக்கலாலேதான் உமாபதிசிவாசாரியர் சிவப்பிரகாச நூலிலே

'பார்திகழ வளர்சாம வேத மல்க'

என்று தமது தந்தையாரது ஆரியமரபுக்குரிய சாமவேதத்தைப் போற்றுங் கடப்பாடு உடையரானார் என்று எழுதினர். எதனையும் சரித்திர வாராய்ச்சியால் துணியும் இவ்வாராய்ச்சியாளர் எந்தச் சரித்திர வுண்மைகளைக்கொண்டு இந்த முடிபுக்கு வந்தார்?

மற்றும் ஓரிடத்து, வடமொழி வேதக்கருத்துத் தமிழர் கொண்ட வழிபாடே என்று கருதிவந்தவர்களும் அக்காலத் திருந்தார்கள். அதனால் ஞானசம்பந்த சுவாமிகள் வடமொழி வேதப்பொருள் அதுவே யென நம்பி வடமொழி வேதத்தையும் தமது பாசுரங்களிலே குறிப்பிடலாயின ரென்று புதிய ஆராய்ச்சி செல்லுகின்றது: இந்த முடிபுக்கு அவ்வாராய்ச்சியாளரது கோட்பாடன்றி ஆதாரம் யாதோ? அன்றியும் ஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் நம்பி விட்டார்களென்றால் மூன்றுவது வயதிலே ஞானப்பாலுண்டமை அவர்களுக்கு யாது பயனைத் தந்தது! மேலும்

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்.

என்று ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் கூறியருளியதும் பொய்படுவ தாகாதா?

இங்ஙனம் புதிது புதிதாக ஒன்றன்மே லொன்றாகப் பல நிந்தைகளே வெளிவருகின்றன. இக் காலத்திலே நம்மவர்கள் நமது சைவ சமயத்தின் கருத்துக்களை யெல்லாம் அறிய இயலா திருப்பினும் பொது வரம்பேனும் அறிந்து வைத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

அப் பொது வரம்பாவது:-

1. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்கவாசக சுவாமிகளாகிய நால்வரும் **சைவ சமயாசாரியர்கள்.** இவர்கள்வாக்கு முழுவதும் பிரமாணமே.

2. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறை ஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியராகிய நால்வரும் **சைவ சந்தான ஆசாரியர்கள்.** இவர்கள் வாக்கு முழுவதும் பிரமாணமே.

3. இந்த இருவகை ஆசாரியர்கள் காலத்தில் வழங்கிவந்த வேதங்கள் இப்பொழுதுள்ள இருக்கு, யசுர், சாமம், அதர்வ மென்னும் நான்கும், ஆகமங்கள் இப்பொழுதுள்ள காமிகம் முதல் வாதுளமீருகிய இருபத்தெட்டும் என்பது அவர்கள் திருவாக்குக் களால் தெரிவதாலும், அவர்கள் இவ்விருவகை நூல்களையும் பர மப்பிரமாணமாக ஏதுவதாலும் **இவ்வேதாகமங்களே** சைவ சமயத்திற்குச் சிறந்த பிரமாண நூல்களென்று விசுவசித்து அவைகள் கூறிய விதிவழி நடக்கவேண்டுவது சைவசமயிகளின் கடப்பாடு.

4. நமது பூர்வீக ஆசாரியர்கள், தமிழ், வடமொழி யென் னும் இரண்டு மொழிகளும் நமக்கு உரிய மொழிகளாக அருளிச் செய்திருக்கிருர்கள்.

'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா'
'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'
'ஆரிய முந்தமி ழும்முட னேசொலி'
'இருமொழியும் நிகரென்னும் இதற்கைய முளதேயோ'

என்பனவாகிய அவர்களது அருளிச்செயல்களைப் பிரமாணமாகக் கொண்ட நாம் தமிழையும் வடமொழியையும் ஒப்பப் பேணி வருதல் வேண்டும்.

5. இடையறவு படாத நமது சைவ பரம்பரையிலே குருப தேசக்கிரமமாய் வருகின்ற எந்தக்கிரியையும்—இருது சங்கமன

முதல் விவாகமீறுகிய பூர்வக்கிரியைகளையும், அந்தியேட்டி முதலாகிய அபரக்கிரியைகளையும், தீக்ஷை பூஜை முதலியவைகளையும் சிறிதும் பூர்வ வரம்பு தவறுமல் அநுட்டித்துச் சமயாசாரத்தைக் காத்து வருவதே உண்மைச் சமய அபிமானமாகும்.

6. இவ்வித அவிச்சின்ன சைவ பரம்பரையிலே வந்த சிவஞான சுவாமிகள் முதலியோர் அருளிச்செய்த சிவஞான பாடியம் முதலிய ஞானப்பொக்கிஷங்கள் கண்ணுக, மேலே சொல்லிய எல்லா நூல்களையும் திருவருள் முகமாகத் தெளிதல் இன்றியமையாதது.

7. முடிவாக மேற்கூறியவற்றிற்கு மாறுன எதனையும் மனப்பூர்வமாக உடம்படாதிருப்பதே முக்கியமானதாகும்.

ஓர் ஊருக்குச் செல்ல விரும்பியவன் அவ்வூருக்குச் செலுத்தும் பாதையிலே சென்றுலன்றி அவ்வூரை யடைதல் முடியாது. தான் முன்னர்ச்சென்றறியாத ஊருக்குச் செல்பவன் முன்சென்று வந்தோர் கூறும் சொற்களை விசுவாசித்துத்தான் செல்லுதல் வேண்டும்; அதுபோலச் சமய ஆசாரத்தை அநுட்டிப்பதிலும் சமயஞானத்தைப் பெறுவதிலும் நமது ஆசாரியராகிய முன்னேர்கள் அருளிச்செய்தவண்ணம் பிறழாது நடத்தல் வேண்டும். அன்றெனில், நாம் எதிர்பார்த்த சமயஞானத்தை அடைதல் முடியாது.

ஆகவே சைவ சமயமே மெய்ச் சமயமென விசுவசிக்கும் நாம் அச்சமய ஆசாரியர்கள் சந்தான ஆசாரியர்கள் திருவாக்குகளைப் பரமப்பிரமாணமாக விசுவசித்து, இடையறவுபடாத நமது சைவ பரம்பரையிலே வரும் வேதாகம ஆசாரங்களை வழுவாது அனுட்டித்துச் சைவஞானம் கைவரப்பெற்றுச் சிவானந்த மெய் துதலேயே இலக்காகக்கொண்டு ஒழுகுவோமாக. இவ்வித லக்ஷயத்துக்கு இடையூறுகத் தமோகுண விருத்தியாகவரும் பல புதிய கருத்துக்களாகிய குழிகளில் விழாது திருவருள் நம்மைக் காப்பதாக.

# சிவாலயங்களும் சைவசமயமும்

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை
திருநெல்வேலி பேட்டை.

சிவாலயங்களைத் தத்தமக்குச் சொந்தமாக்க விரும்பும் எவரும் "ஆலயங்களெல்லாம் ஒரு மொழியின் நிலயமல்லவே; ஒரு சாதியின் நிலயமல்லவே, ஒரு சமயத்தின் நிலயமல்லவா? அச்சமயத்தை நாம் தழுவுகின்றோமா? அங்ஙனமாயினன்றோ ஆலயங்களில் நமக்கு உரிமை யெய்துதல் கூடும்?" என்றின்னோரன்னவற்றை யெல்லாம் நெஞ்சறியத் தமக்குள் விவகரித்துப் பார்த்தல் வேண்டும்.

அங்ஙனமின்றி ஆலயங்கள் தமிழர்க்கே யுரியன வென்றும் * வடமொழியாளர்க்கே யுரியன வென்றும், பிராமணர்க்கே யுரியனவென்றும், திராவிடர்க்கே யுரியனவென்றும் கூறி ஒரு சாதியார் அல்லது ஒரு மொழியார் வழக்கிடுதல் சிறிதும் முறையன்று.

சாதிப்பெயர் மொழிப்பெயர்களெல்லாம் ஆலயங்களுக்கு உண்மையி லுரியரல்லாதாரினும் போய்ப்பற்றி அவருள் நாத்திகர் முதற் பல சமயத்தாரையும் அகப்படுத்தி நிற்றலான் வரம்புட்படாத வார்த்தைகளாகும். ஆதலின் அவ் வார்த்தைகளைப் போர்த்துக்கொண்டு ஆலயங்களைச் சுவீகரிக்க எண்ணுவது தமிழர் முதலிய யாவர்க்குந் தகாது. இந்து மதம் என்னும் பெயரும் சைவசமயமல்லாத பிறசமயங்களையும் போய்ப்பற்றி முன்னையவைபோல வரம்புட்படாததேயாகும். ஆகையால் இந்து மதப்போர்வையும் சிவாலயவுரிமையை உள்ளபடி தருதலில்லை.

---

இந்தக் கட்டுரை 1927ல் "சமய ஞானம்" பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

* வடமொழி இந்தியர்க்கெல்லாம் பொது மொழி. அஃது ஒரு வகுப்பினர் மொழியன்று. எனினும் ஒரு சிலர் அது தமக்குரிய மொழியென்று சொல்லவும், மற்றும் ஒரு சிலர் அஃது உண்மையென மயங்கலும் உண்மையின், இவ்வாறு கூறப்பட்டது.

பின்னை, சிவாலயங்கள் யாருக்குத் தான் உரியனவோ வெனின் அவை ஒரு சமயச் செல்வமாகலின் அச்சமயிகட்கே உரியன. அச்சமயிகளே வைதிகசைவர். அவருக்கே ஆகமியர் என்றொரு பெயரும் உண்டு. வடமொழிக்கணுள்ள இருக்காதி நான்கு வேதங்களையும், காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங் களையும், தமிழ்க்கணுள்ள பன்னிருதிருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், சிவஞான பாஷ்யத்தையும் பரமப்பிர மாணமெனவே ஆன்றோராசாரம் பற்றி விசுவசித்தொழுகும் நன் மக்களே அவ்வைதிக சைவர். இவ்வரம்பிற் கலங்காது உறைத்து நிற்கும் எவரும் வைதிக சைவரென அழைக்கப்பட்டு ஆலயங் களுக்கு உரிமையெய்துவர். இவ் விசுவாசத்தை யிகந்து திரி வோர் எவரேனுமாக அவர்க்கும் ஆலயங்கட்கும் ஒட்டுஎட்டுணையு மில்லை. சமய நிலயம் சமயத்துக்குத்தானேயுரியது; சாதிக்கேது? மொழிக்கேது? ஆகையால் சிவாலயங்களைச் சுவீகரிப்பதற்குமுன் சைவசமயத்தைச் சுவீகரித்து அதன் வரம்பில் மேற்கூறியாங்கு நின்றுகொள்வதே நியாயமாம்.

நமது நாட்டுச் சிவாலயங்கள் சிவாகமத்தின் வழி நிருமிக்கப் பட்டவை. அங்குப் பூசை விழா முதலிய அனைத்தையும் அவ் வாகம விதி வழாது நடைபெறுத்தும் அதிகாரம் முற்கூறியபடி ஆகமநூலைப் பதிவாக்கென விசுவசித்தொழுகும் சைவசமயிகளுக் குத்தான் உண்டு. அவரும் அவைகளை ஆகம விதியின்வழி நடை பெறுத்தமட்டும் அதிகாரம் பெற்றுள்ளார். ஆகமநூலின் வைத்த முறை ஆலயங்களை நடாத்துதற்கே முற்காலத்துச் சைவப் பெரி யார் அவைகளின் வசத்தில் அளவிறந்த பொருட்செல்வத்தை வைத்துப் போயினர், ஆகையால் தமதறியாமையானும் பிறர் தூண்டுதலானும் உந்தப்பட்டு ஆகம விதிகளை எதிர்த்துப் பழை யன கழிதல் புதியனபுகுதல் முதலிய எவ்வித மாறுதல்களையும் ஆலயங்களிற் கொண்டுவரச் சைவர்க்குத் தானும் அதிகாரம் இல்லை.

புதுமைகள் புத்திக்குப் பொருந்துவனபோலத் தோன்றி னும் ஆகம விரோதமாயின் ஆலயங்களின் நுழைதல் கூடா. மாமூல் மாமூல் என்று வரும் வழக்கங்கள் ஆகம விதிக்கு

அவிரோதமாயிருந்தால் மட்டும் அங்கிகரிக்கப்படும். விரோதமாயின் அவைகளை யொழித்தன்றி உண்ணுதல் உறங்குதல் முதலிய எவையும் ஆகமியர்க்கடா. விதிகளும் அதிகாரிகளும் இல்லாத புறம்போக்கு நிலயங்களிற்றான் இட்டமும் மாமூலும் நட்டமாடலாம். ஆலயங்களுக்கு விதிநூல் ஆகமம்; அதிகாரி ஆகமியர்.

சிவாலயங்களின் வசத்திலுள்ள பொருட் செல்வத்திற் பெரும்பகுதி முற்காலத்துச் சைவப் பெரியாரது உடைமையே. பிறசமயத்தவரும் பொருள் விட்டிருப்பதாகச் சில பல சரித்திரங்கள் காணப்படுகின்றன. அவையுண்மையாயின் அவர் கொடுத்த பொருளெல்லாம் மிகச் சிறு பகுதியே. அப்பிற சமயத்தாரும் தாம் செய்த பொருளுபகாரமே காரணமாகச் சிவாலயங்கள் தமது இட்டப்படி அல்லது தமது சமயக்கோளின்படி நடைபெறுதல் வேண்டுமென்று விரும்பியுமிருப்பாரா? ஒருக்காலும் மாட்டார். தற்கால ஆங்கிலேய அரசினரே இதற்குச் சான்று. ஒருக்கால் விரும்பியிருப்பாரேயாமாயின் அக்காலத்துச் சைவப்பெருமக்கள் அப்பொருளுபகாரத்தை ஏற்றிருக்கவேமாட்டார்கள். ஆகையால் பொருளுபகரித்தோர் எத்தகையராயினும் அவரெல்லாம் சிவாலயங்கள் சைவ சமய விதிநூலாகிய சிவாகம விதியின்வழி மிக்க சிறப்பாக நடைபெறுதல் வேண்டுமென்னும் நல்லெண்ணமுடையவரே. அந்நன்னோக்கத்தை மறந்தோ, பிறிது காரணத்தாலோ 'சிவாலயங்களுக்குத் தமிழர் பொருளுபகரித்தார்; வடமொழியார் பொருளுபகரித்தார்' என்று பொதுப்படக் கூறிக்கொண்டு சைவசமயிகளல்லாத பிறசமயத்தார் சைவ சமய நிலயங்களை அபகரிக்க எண்ணுவதும், அங்குத் தமது இட்டத்துக்கும் தமது சமயக்கோளுக்கும் இணங்கத் திருத்தங்கள் செய்ய முனைப்பதும் அநீதி, அநீதி.

நிற்க, தற்காலத்தில் சிவாலயங்கள் சிறிது சீர்கேடடைந்திருப்பது உண்மையே. சீர்கேடென்பதெல்லாம் ஆலயங்களில் ஆகம விதிக்கு மாறுபட்டு நடக்குங் காரியங்களேயாம். ஆகையால் ஆகமம் வல்ல சைவபண்டிதர்களே ஆலய காரியங்களை ஆகமவிதிகளோடு ஒத்திட்டுப்பார்த்து விரோதமானவைகளை யொழிக்கவும்,

பிறழ்ந்தவைகளை யொழுங்குபடுத்தவும் வல்லராவார். இவர் செய்வதே திருத்தமாகும். இச் சீர்திருத்தத்தை அரசியல் வாதிகள் செய்யமாட்டுவார்களா? மொழிப்போர் செய்வோர் செய்ய மாட்டுவார்களா? சாதிச் சண்டையிடுவோர் செய்யமாட்டுவார் களா? ஒவ்வொருவர் கவனமும், நடுநிலையும் தத்தமது குறிக் கோளில் சாய்ந்து கிடக்கும். அன்றியும் தத்தங் குறிக்கோள்கள் இறந்துபடாது நிலையுதற்பொருட்டு இவர்கள் தமது அரசியற் சிறுதெய்வத்துக்கும், மொழிச் சிறு தெய்வத்துக்கும், சாதிச் சிறு தெய்வத்துக்கும் வைதிகசைவம் என்னும் சமயதேனுவைப் பலியுமிட ஒருப்படுவர். அன்றியும் இவர்கள் கூட்டத்திலெல் லாம் பல சமயத்தாரும் கூடிக் குலாவுவர். இத்தகைய கந்தர் கூளக் கூட்டத்தார் கூடிச் சிவாலயங்களைத் திருத்துவதென்பது அபத்தமே. ஆனால் இக்காலத்தில் விரும்பப்படும் சீர்திருத்தங் களைச் சிவாகமம் வல்ல சைவபண்டிதர்களிடம் கலந்து விஷயங் களை நன்கு உணர்ந்து திருத்தியமைப்பதும், கால நிலையையும் சமய சமுதாய நலத்தையும் செவ்விதின் ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்பச் சிவாகமங்களோடு மாறுபடாதவற்றைச் செய்யவேண்டு வதும் இன்றியமையாதனவே.

ஆலயங்களில் எத்தகைய சீர்திருத்தஞ் செய்வதற்கும் உண்மையி லுரியார் வைதிக சைவரே யாதலின் இவ்வைதிக சைவர்கள் வேறு பல துறைகளிலிறங்கிப் பலபடப் பிரிந்து எப்படி யுழைக்கினும் ஆலய காரியங்களோடு சம்பந்திக்கும் போது வைதிக சைவ ராஜாங்க கௌரவமாகிய இடபக்கொடி யின்கீழ் ஒன்று சேர்ந்து கொள்ளுதல்வேண்டும். இவர்களே ஆக மத்தின் ஆட்சி ஆலயங்களில் கெட்டொழியாதவாறு அவைகளைச் சீர்பெற நடாத்தல் வேண்டும். அன்றுதான் இவர்கள் ஆண்மை யுடையராவர்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க

# சைவ சமய உண்மைகள்.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் காலஞ்சென்ற
சிவஸ்ரீ வி. சிதம்பரராமலிங்க பிள்ளை அவர்கள்

௧

கடவுளும், உயிர்களும், உயிரறிவை மறைத்து நிற்கும் தடைப்பொருள்களும் என்றும் உள்ளன (கடவுள்–பதி. உயிர்கள்—பசு. தடைப்பொருள்—பாசம்.)

௨

கடவுள் சிவபெருமான் ஒருவரே. அவர் எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அநுக்கிரகமும் இயல்பாகவுடைய அதிபரிசுத்தர்.

௩

உயிர்கள் எண்ணிறந்த பல. அவ்வுயிர்கள் பலவேறு வகைப்பட்ட சிற்றறிவும் பரதந்திரமும் கடவுள் அநுக்கிரகமின்றி அமையாமையும் இயல்பாகவுடையனவாய்ச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பன.

௪

உயிரறிவை மறைத்து நிற்கும் தடைப்பொருள்கள் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றுமாம். அவற்றுள் ஆணவம் நெல்லில் உமி போன்றும் செம்பிற் களிம்புபோன்றும் உயிரின் குற்றமாய் உடன்தோன்றி நிற்பது. இருள் ஒன்றேயாயினும் பல கண்களையும் மறைத்து நிற்பதுபோல ஆணவம் ஒன்றேயாயினும் பல உயிர்களின் அறிவையும் மறைத்து நிற்கும். கன்மம், உயிர்கள் தானென்னும் முனைப்போடு மனம் வாக்குக் காயமென்

னும் மூன்றுனும் செய்யுந் தொழில். மாயை ஆடையிற் படிந்த அழுக்கை நீக்குதற்கு ஆடையிற் செறிக்கப்படும் உவர் போல, உயிரிற் படிந்த ஆணவத்தடை நீக்குதற்கு உயிரிற் செறிக்கப் பட்டது.

ரு

சிவபெருமான் அநாதியே ஆணவத்திலே அழுந்திக் கிடந்த உயிர்கள்மேல் வைத்த பெருங்கருணையாலே சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் ஐந்து தொழில் களையும் செய்தருளுவர். அவற்றுள் சிருஷ்டியென்பது உயிர்கட்கு அவற்றின் கர்மத்துக்கு ஏற்ப மாயையிலிருந்து சரீரம் உலகம் முதலியவற்றை உண்டாக்கிக் கொடுத்தல். திதி யென்பது அங்ஙனம் உண்டாக்கப்பட்ட சரீரம் உலகம் முதலியவற்றைப் பாதுகாத்தல். சங்காரமென்பது அச்சரீரம் உலகம் முதலிய வற்றை மாயையின் ஒடுக்குதல். திரோபவமென்பது உயிர்கள் தாம் செய்த வினைப் பயன்களை அனுபவிக்கும்படி செய்தல். இது திதி நிகழும்போது நடைபெறுவது. அனுக்கிரகமென்பது உயிர் களுக்கு ஆணவம் கன்மம் மாயை யென்னும் மூன்று தடை களையும் நீக்கிப் பேரின்பங் கொடுத்தல். இது சங்காரம் நிகழும் போது நடைபெறுவது.

சா

உயிர்கள் தமக்குக் கிடைத்த சரீரத்தின் உதவியால் இவ்வுலகத்திலே நல்வினை தீவினைகளைச் செய்யும். இவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களை முறையே சுவர்க்கத்திலும் நரகத் திலும் அனுபவிக்கும். பின்னர் மறுபடியும் அவை (எஞ்சிய) கர்மத்திற்கேற்ப இவ்வுலகிற் பல பிறவிகளிற் பிறக்கும். இங்ஙனம் உயிர்கள் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் வரும். உயிர்களுக்குக் கிடைக்கும் பிறவிகள் பலவற்றுள்ளும் மக்கட் பிறப்பே முத்தி- யின்பம் பெறுதற்குக் கருவியாதலால் மிகச்சிறந்தது.

எ

மனிதப் பிறப்புப் பெற்றவர்கள் முன் பல பிறவிகளை யெய்தினமை காரணமாகச் சிறிது சிறிது அறிவு விளக்கம்

பெற்றுப் படிப்படியாகப் பலவேறு வகைப்பட்ட மதங்களிலே நின்று அவ்வநூல்களின் விதித்தபடி ஒழுகுவர்: அவ்வாறு ஒழுகிய புண்ணியவிசேடத்தால் மேலான சைவசமயத்திற்புகுந்து வேத சிவாகமங்களில் விதித்தபடி ஒழுகுவர்.

அ

வேத சிவாகமங்களிலே விதிக்கப்பட்ட சாதனங்கள் சரியை கிரியை யோகம் ஞானமென நான்காம். அவற்றுள் சரியையாவது ஒழுக்க நெறியிலே நின்று சிவபெருமானைச் சரீரத்தால் வழி படுதல்: கிரியையாவது ஒழுக்க நெறியிலே நின்று சிவபெருமானைச் சரீரத்தாலும் மனத்தாலும் வழிபடுதல்: யோகமாவது ஒழுக்க நெறியிலே நின்று சிவபெருமானை மனத்தால் வழிபடுதல்: ஞானமாவது சிவபெருமானை அறிவால் வழிபடுதல்.

கூ

சரியை கிரியை யோக நிலைகளிலே நின்று சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தலே சிவபுண்ணியமாம். இச்சிவ புண்ணியத்தால் யான் இன்ன நல்வினைசெய்தேன் எனக்கு இன்னார் தீவினை செய்தார் என்னும் நினைப்பு நீங்குதலாகிய இருவினைச் சமபுத்தியுண்டாகும். இச்சமபுத்தியால் அகங்காரம் கெட ஆணவ அழுக்கு நீங்கும் பருவம் வரும். அப்பருவத்தில் சிவபெருமானுடைய திருவருள் ஆன்மாவினிடம் விசேஷமாகப் பதியும். அச்சமயம் சிவபெருமானே குருவாக எழுந்தருளி வந்து ஞானோபதேசம் செய்வர்.

ம

அவ்வாறு ஞானோபதேசம் பெற்ற உயிர் அவ்வுபதேச நெறியை உறுதியாகக்கொண்டு சிவபெருமானைத் தன்னுள்ளே சிவோகம்பாவனை செய்து நாடும். அங்ஙனம் நாடிய காலத்து மாயா காரியமாகிய உலகப் பொருள் முதலியவற்றின் நிலையாமை கண்டு, உயிர் அவற்றினின்று நீங்கவே, அவ்வுயிர்க்குச் சிவபெருமானுடைய ஞானசொரூபம் விளங்கும். இவ்வித ஞான சொரூப விளக்கம் நிலைபெறுதற்கு வேண்டப்படுவன சிவாலயத்தையும்

79-3

சிவனடியார்களையும் சிவமெனவே கண்டு வழிபடுதலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரித்தலுமாம்.

௰௧

ஞானசொரூப விளக்கம் நிலைபெற்ற உயிர், முன் பாசத்தோடு கட்டுண்ட காலத்துச் சிவபெருமானை வேறு காணாது நின்ற நிலைபோல இப்பொழுது தன்னை வேறு காணாது சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு அவரருளாலல்லது ஒன்றையும் செய்யாது நிற்கும். அவ்வாறு நிற்கும் உயிர் சிவபெருமான் தன்னோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்று கருணையால் உபகரித்து வரும் உரிமையை நோக்கி நோக்கி, அப்பெருமானிடத்துப் பேரன்பு முறுகி வளரப்பெறும். இதுவே ஞானத்தின் முடிவான நிலை.

௰௨

இவ்வித ஞானநிலை அடைந்தவர்களே சிவஞானிகள். அவர்களிடம் ஆணவம் வறுத்த வித்துப்போற் பயனற்றுக் கிடக்கும். ஆணவம் பயனற்றுக் கிடப்பவே தானென்னும் முனைப்பில்லாமையால் கர்மம் இல்லை. இவை இல்லாமையால் மாயையும் அவர்களுக்கு வேண்டப்படுவதில்லை. ஆகவே சிவஞானிகள் ஆணவம் கர்மம் மாயை யென்னும் மூன்று தடைகளும் அவற்றின் வாசனையும் நீங்கி, அறிவு முழுவதும் விளங்கப்பெற்று, எல்லாம் சிவமயமாகக் கண்டு, சிவபெருமானுற் கொடுத்தருளப் பெறும் பேரானந்தத்திலே அழுந்தி ஆனந்தமயமாயிருப்பார்கள். இதுவே மோக்ஷ நிலை.

"ஆனந்தக் கூத்த னருள்பெறின் நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின்ருடாமோ தோணேக்கம்"

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க

---

ஜோதி அச்சு நிலையம், திருநெல்வேலிச் சந்திப்பு.

உ

சிவமயம்

சைவசமய மேசமயஞ் சமயா தீதப்
பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக்
கருத்தை விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா
முத்தி தருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாருஞ் செகத்தீரே.

(தாயுமானவர்)

உ

சிவமயம்.

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினா லுருகி விழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
வாசைக் கடற்குண் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத் திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள் வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்க
டொழு தருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொருபானு பூதி காட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

(தாயுமானவர்)